# BSNL ஊழியர் சங்கம்
# தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:74** **தேதி:-10.11.2015**

## மத்தியசங்கசெய்திகள்

அன்பார்ந்த தோழர்களே,

**DIRECTOR(CM)ஆக திரு R.K.மிட்டல் நியமனம்:-** தற்போது MTNLல் GMஆக பணியாற்றும் திரு R.K.மிட்டல் BSNLன் DIRECTOR(CM)ஆக நியமிக்கப்பட்டுள்ளார். அவருக்கு நமது வாழ்த்துக்கள். அவரை நமது பொதுசெய்லாளர் தோழர் P.அபிமன்யு மற்றும் துணை பொது செயலாளர் தோழர் ஸ்வபன் சக்கரவர்த்தி ஆகியோர் 06.011.2015 அன்று சந்தித்து பேசினர். BSNLன் புத்தாக்கத்திற்கு பெரும் பங்காற்றக்கூடிய மொபைல் சேவைகளை மேம்படுத்த BSNL ஊழியர் சங்கத்தின் முழு ஒத்துழைப்பு கிடைக்கும் என அவர்கள் தெரிவித்தனர். BSNLன் கடந்த கால பெருமைகளை மீட்க தானும் சிறந்த முயற்சிகளை செய்வதாக DIRECTOR(CM) தெரிவித்தார். 24.11.2015 அன்று BSNL ஊழியர் சங்கம் நடத்த உள்ள கருத்தரங்கில் கலந்துக் கொள்ள வேண்டும் என்கின்ற தலைவர்களின் வேண்டுகோளை அவர் ஏற்றுக் கொண்டார்.

**கேடர் பெயர் மாற்றம்:-** 03.11.2015 அன்று BSNL ஊழியர் சங்கத்தின் பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு மற்றும் தோழர் ஸ்வபன் சக்கரவர்த்தி Dy.GS, ஆகியோர் BSNLன் CMD திரு அனுபம் ஸ்ரீவஸ்தவா அவர்களை சந்தித்து கேடர் பெயர் மாற்ற பிரச்சனையில் 28.07.2015 அன்று ஏற்பட்ட ஒப்பந்தம் இன்று வரை அமுலாக்கப்படாததற்கு தங்களின் அதிருப்தியை தெரிவித்தனர். கூட்டுக் குழுவில் ஏற்றுக் கொண்ட அடிப்படையில் TTA கேடருக்கு JUNIOR ENGINEER என்ற பெயரை வழங்க வேண்டும் என, அதற்கு தேவையான ஆதாரங்களுடன் கடுமையாக வாதிட்டுள்ளனர். மேலும் NE-11 ஊதிய விகிதத்திற்கு கீழான Sr.TOAக்களுக்கு முன்மொழியப்பட்டுள்ள பெயரில் ஒரு சிறிய மாற்றம் தேவைப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர். இதற்கு ஆவன செய்வதாக BSNL CMD தெரிவித்துள்ளார்.

இதன் பின்னர் 04.11.2015 அன்று இவர்கள் GM(Restg) திரு A.M.குப்தா அவர்களையும் சந்தித்து இந்த பிரச்சனையை விரைவுபடுத்த கேட்டுக் கொண்டனர்.

06.11.2015 அன்று GM(Restg) திரு A.M.குப்தா அவர்களை சந்தித்து, NE-11 ஊதிய விகிதத்திற்கு கீழான Sr.TOAக்களுக்கு முன்மொழியப்பட்டுள்ள பெயரில் ஒரு சிறிய மாற்றத்தை ஏற்படுத்த பெயர் மாற்றக் குழுவின் ஒரு கூட்டம் அவசியம் என்றும் அதனை விரைவில் கூட்ட வேண்டும் என்றும் நமது தலைவர்கள் கேட்டுக் கொண்டனர்.

**NEPPயில் மாற்றம்:-** BSNL நிர்வாகத்துடன் 30.10.2008ல் BSNL ஊழியர் சங்கம் NEPPயில் போட்ட உடன்பாட்டில் 01.10.2000 முதல் 01.10.2004 வரையிலான காலத்தில் பெற்ற OTBP, BCR போன்ற சேவைக்காலத்தின் அடிப்படையிலான பதவி உயர்வுகள் மட்டுமே NEPPயில் முதல் பதவி உயர்வாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என இருந்தது. ஆனால் உடன்பாட்டை மீறி 01.10.2000க்கு பின் பெற்ற TM, TTA உள்ளிட்ட பதவி அடிப்படையிலான பதவி உயர்வுகளும் NEPPயின் முதல் பதவி உயர்வாக எடுத்துக் கொள்ளப்பட்டு வருகிறது. எனவே இதில் நியாயம் வழங்க வேண்டும் என BSNL ஊழியர் சங்கம் மீண்டும் ஒரு கடிதத்தை DIRECTOR(HR) அவர்களுக்கு எழுதியுள்ளது.

**MTSஐ ரிலையன்ஸ் வாங்குகிறது:-** MTS பெயரில் இயங்கும் SISTEMA INDIA நிறுவனத்தை அனில் அம்பானியில் ரிலையன்ஸ் கம்யூனிகேஷன்ஸ் (RCOM) வாங்க உள்ளது. இரு நிறுவனங்களுக்கும் இடையே ஒப்பந்தம் ஒன்று ஏற்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், 300 மில்லியன் அமெரிக்க டாலர்கள் மதிப்புள்ள RCOMன் 10 சதவிகித பங்குகள் SISTEMA விற்கு சொந்தமாகும். மேலும் SISTEMA நிறுவனம், அடுத்த பத்து ஆண்டுகளில் இந்திய அரசுக்கு செலுத்த வேண்டிய ஸ்பெக்ட்ரம் கட்டணமான 392 கோடி ரூபாய்களை RCOM செலுத்தும். SISTEMAவிற்கு இந்தியாவில் 9 மில்லியன் சந்தாதாரர்கள் உள்ளனர். இந்திய மொபைல் தொழிலில் இது தான் மிகப்பெரிய இணைப்பு.

**விடுபட்ட காசுவல் ஊழியர்களை நிரந்தரப்படுத்து-CMDயிடம் கோரிக்கை;-** BSNL ஊழியர் சங்கத்தின் பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு, தோழர் ஸ்வபன் சக்கரவர்த்தி, Dy.GS., BSNLEU, தோழர் அனிமேஷ் மித்ரா SG BSNLCCWF மற்றும் தோழர் VAN நம்பூதிரி தலைவர் BSNLCCWF ஆகியோர் 04.11.2015 அன்று CMD திரு அனுபம் ஸ்ரீவஸ்தவா அவர்களை சந்தித்து விடுபட்ட காசுவல் ஊழியர்களை நிரந்தரப்படுத்துவதற்கான ஒரு திட்டத்தை கொண்டு வருவதாக நிர்வாகம் தேசிய கவுன்சில் கூட்டத்தில் கொடுத்த உறுதிமொழியை அமுல்படுத்தவேண்டும் என கேட்டுக் கொண்டனர். இந்த பிரச்சனையை பரிவுடன் பரிசீலிப்பதாக CMD தெரிவித்தார்.

**இந்தியாவில் தாலிபான்கள்?:-** கர்நாடக முதலமைச்சர் சீத்தாராமையா அவர்களின் தலையை துண்டித்து, அதில் கால்பந்து விளையடப்போவதாக கர்நாடக மாநிலத்தில் உள்ள சிமோகாவின் பாஜக செயலாளரான S.N.சென்னபசப்பா மிரட்டியுள்ளார். கர்நாடக மாநில முதல்வர், “நான் மாட்டிறைச்சியோ, பன்றியின் இறைச்சியோ அல்லது வேறு ஏதாவது இறைச்சியோ உண்பதிலிருந்து யாரும் என்னை தடுக்க முடியாது” என்று சொன்னது தான் இதற்கு காரணம். தலையை துண்டிப்பது உள்ளிட்ட அறிக்கைகள் சாதாரணமாக தாலிபான்கள் தான் வெளியிடுவார்கள். ஒரு சில அமைப்புகள் மற்றும் தலைவர்களின் ’தாலிபான் மனப்பாங்கி’னைத்தான் இந்த பாஜ க தலைவரின் அறிக்கை நமக்கு நினைவு படுத்துகிறது.

**கேபிள் துண்டிப்பு மற்றும் திருட்டு:-** அரசின் பல்வேறு நிறுவனங்களால், BSNLன் கேபிள்கள் மிகப்பெரிய அளவில் துண்டிக்கப்படுவது தொடர்பாக 30.10.2015 அன்று BSNL ஊழியர் சங்கம் மத்திய தொலை தொடர்பு அமைச்சருக்கு கடிதம் எழுதியது. அதன் அடிப்படையில் 03.11.2015 அன்று கார்ப்பரேட் அலுவலகம் அனைத்து தலைமை பொது மேலாளர்களுக்கும் ஒரு கடிதம் எழுதியுள்ளது. இந்த பிரச்சனையில் பொறுப்பான அதிகாரத்தில் உள்ளவர்கள் அக்கறையுடன் உள்ளதாகவும், பாதிக்கப்பட்ட கேபிள்கள் தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு அந்த நிறுவனங்களிடம் இருந்து நஷ்ட ஈடு பெறுவதற்கு வழிகாட்டியுள்ளது. இது தொடர்பாக மாதாந்திர அறிக்கையினை அனைத்து தலைமை பொதுமேலாளர்களும் கார்ப்பரேட் அலுவகத்திற்கு அறிக்கை அனுப்ப வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**தீவிரவாத மொழியில் ஷாருக்கான் பேசுகிறார்-ஆதித்யநாத்:-** பாஜக மற்றும் RSS தலைவர்களின் சகிப்பு தன்மையின்மைக்கு எல்லைகள் இல்லாமல் போய்விட்டது. ஹிந்தி திரைப்பட நடிகர் ஷாருக்கான் தான் அவர்களது சமீபத்திய இலக்கு. அவர் நாட்டில் வளர்ந்து வரும் சகிப்புதன்மையின்மை தொடர்பான தனது கவலையினை தெரிவித்திருந்தார். உடனடியாக

பாஜக தலைவர் விஜய்வார்கியா, ஷாருக்கானுடைய இதயம் பாகிஸ்தானில் உள்ளதாக தெரிவித்தார். பாஜக MP ஆதித்யநாத், ஷாருக்கான் தீவிரவாத மொழியில் பேசுவதாக சொல்கிறார். பாகிஸ்தானுக்கு செல்வதாக ஷாருக்கான் எடுத்த முடிவை வரவேற்பதாக சொல்கிறார். ஹிந்துக்கள் அவரது திரைப்படத்தை பார்ப்பதை நிறுத்தி விட்டால் அவரும் சாதாரண முஸ்லீமாக மாறிவிடுவார் என்பதை ஷாருக்கான் புரிந்துக் கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார். பாஜக மற்றும் RSSன் குறிக்கோள் தேசத்தை முன்னேற்றுவதல்ல. ஆனால் மக்களை மதரீதியாக பிரித்து அதன் மூலம் அரசியல் ஆதாயம் அடைவது தான் என்பதை இந்திய மக்கள் விரைவாக புரிந்து வருகின்றனர்.

**மாற்றப்பட்ட CGHS பட்டியல் ஏற்பு:-** CGHS நிறுவனம் 2014ஆம் ஆண்டு தனது விலைப்பட்டியலை மாற்றியமைத்திருந்தது. ஆனால் BSNL நிறுவனத்தில் பல மாநிலங்களில் CGHSன் 2010ஆம் ஆண்டு விலைப்பட்டியலையே அமுல்படுத்தி வந்தன. இதை மாற்ற வேண்டுமென BSNL ஊழியர் சங்கம் 12.10.2015 அன்று கார்ப்பரேட் அலுவலகத்தில் உள்ள GM(Admn)க்கு கடிதம் எழுதியது. அதன் அடிப்படையில் கார்ப்பரேட் அலுவலகம் 05.11.2015 அன்று புதிய பட்டியலை அமுல்படுத்த வேண்டும் என மாநிலங்களுக்கு கடிதம் எழுதியுள்ளது.

**அலுவலக நிகழ்வுகளை படம் பிடிக்கக் கூடாது:-** அலுவலகத்தில் நடைபெறும் கூட்டங்களின் நிகழ்வுகளை அந்த கூட்டத்தின் தலைவரின் அனுமதியின்றி படம் பிடிப்பது சட்டப்படி தவறு என்றும் அது BSNL CDA விதிகளின் எண்கள் 4,5,11 மற்றும் 13ன் அடிப்படையில் குற்றமாகும் என கார்ப்பரேட் அலுவலகம் உத்தரவிட்டுள்ளது.

**மருத்துவ பில்கள் தீர்வு- CGHSவிலைப்பட்டியல்:-** பல மாநிலங்களில் OUTDOOR TREATMENTகளுக்கு CGHS விலைப்பட்டியலை பயன்படுத்துவதாக தெரிய வந்துள்ளது. ஆனால் OUTDOOR TREATMENTகளுக்கான செலவுகளுக்கு, வருடாந்திர உச்சவரம்பு மற்றும் 17.04.2015 வெளியிடப்பட்டுள்ள கடித எண்: BSNL/Admn.I/15-6/14 வழிகாட்டுதல்களை மட்டுமே கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவேண்டும். INDOOR TREATMENTகளுக்கு மட்டுமே CGHS விலைப்பட்டியல் பொருந்தும். எனவே கட்டுப்பாட்டுகளுக்குள் கட்டுபாட்டுக்களை உருவாக்குவது சரியல்ல என கார்ப்பரேட் அலுவலகம் 05.11.2015 அன்று வெளியிட்டுள்ள BSNL/Admn.I/15-9(5)/15 என்கின்ற உத்தரவு தெரிவிக்கின்றது.

**மருத்துவ பில்களை கால தாமதப்படுத்தாதே**:- மருத்துவ பில்களை காலம் தாழ்த்தாமல் உடனடியாக தீர்வு காண வேண்டும் என அனைத்து மாநில தலைமை பொது மேலாளர்களுக்கும் கார்ப்பரேட் அலுவலகம் உத்தரவிட்டுள்ளது.

**BSNL-MTNL இணைப்பு:-** BSNL-MTNL இணைப்பு தொடர்பாக IIM Bangalore வழங்கியுள்ள அறிக்கையினை மத்திய அரசாங்கம் அக்கறையுடன் பரிசீலித்து வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. பத்திரிக்கை செய்திகளின் படி IIM Bangalore வழங்கியுள்ள ஒரு முன்மொழிவு என்பது ஒரு புதிய நிறுவனத்தை உருவாக்கி அதன் துணை நிறுவனங்களாக BSNL மற்றும் MTNL ஆகியவற்றை வைத்துக் கொள்வது என்பதாகும். மற்றொரு முன்மொழிவு என்பது, பங்கு சந்தையில் பட்டியலிடப்பட்ட MTNLஐ அதிலிருந்து எடுத்துவிட்டு, BSNL உடன் இணைப்பது. அதில் BSNLன் துணை நிறுவனமாக MTNL இருக்கும்.

**TM தேர்வு எழுத கல்வி தகுதி:-** TM தேர்வு எழுத பத்தாம் வகுப்பு தேவை எனும் கல்விதகுதியை நிர்வாகம் வெளியிட்டுள்ளது. பத்தாம் வகுப்பு படிக்காத ஊழியர்களும் தேர்வு எழுத வாய்ப்பு கொடுக்கும் வகையி8ல் ஒரு கட்ட முயற்சியாக வரவுள்ள TM தேர்வுக்கு பத்தாம் வகுப்பு கல்வி தகுதியை தளர்த்த வேண்டும் என BSNL ஊழியர் சங்கம் கோரிக்கை வைத்திருந்தது. இது தேக்க நிலையை அடைந்துள்ள RM ஊழியர்களின் எண்ணிக்கையையும் குறைக்கும். இது தொடர்பாக பலமுறை நிர்வாகத்துடன் நமது மத்திய சங்கம் விவாதித்து இருந்தது. எனினும் நமது கோரிக்கையினை ஏற்க மறுத்து ஒரு கடிதத்தை கொடுத்துள்ளது.

**JTO இலாகா தேர்வு:-** JTO இலாகா தேர்வுகளை நடத்துவதில் ஏற்பட்டுள்ள கால தாமதத்திற்கு தங்களின் வருத்தங்களை GM(Estt) திருமிகு மது அரோரா அவர்களிடம் நமது பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு மற்றும் துணை பொது செயலாளர் தோழர் ஸ்வபன் சக்கரவர்த்தி ஆகியோர் தெரிவித்தனர். தங்களது மாநிலங்களில் உள்ள காலிப்பணியிடங்களின் விவரங்களை 31.10.2015க்குள் அனுப்ப வேண்டும் என கார்ப்பரேட் அலுவலகம் மாநிலங்களுக்கு கடிதம் எழுதி உள்ளது. எனினும் ஒரு சில மாநிலங்கள் மட்டுமே கொடுத்துள்ளது. மற்ற மாநிலங்கள் இந்த விவரங்களை எப்பொழுது அனுப்பி கார்ப்பரேட் அலுவலகம் எப்பொழுது தேர்வுக்கான தயாரிப்பு பணிகளை செய்யும் என்பது தெரியவில்லை. இது தொடரபாக விரைந்து செயல்பட்டு JTO இலாகா தேர்வுகளை விரைவில் நடத்த வேண்டும் என நமது பொது செயலரும், துணை பொது செயலாளரும் GM(Estt)ஐ கேட்டுக் கொண்டனர். அவரும் ஆவன செய்வதாக ஏற்றுக் கொண்டுள்ளார்.

**GM(HR)களின் கூட்டம்:-** பல ஊழியர் பிரச்சனைகளில், மாநில அலுவலகங்களில் இருந்து விவரங்களை கார்ப்பரேட் அலுவலகம் கேட்கிறது. எனினும் மாநில அலுவலகங்கள் அவற்றை பொருட்படுத்தாமல் இருப்பது வாடிக்கையாக இருக்கிறது. விவரங்கள் வராத காரணத்தால், பல முக்கிய பிரச்சனைகள் ஒப்புதலுக்காக நிர்வாகக் குழு/ இயக்குனர் குழுவிற்கு அனுப்ப முடியாத நிலை ஏற்படுகிறது. இதன் காரணமாக பல ஊழியர்களின் பிரச்சனைகள் கார்ப்பரேட் அலுவலகத்தில் தேங்கிக் கிடக்கிறது. அனாமலி மற்றும் JTO காலிப்பணியிடங்கள் ஆகியவை அவற்றில் ஒரு சில உதாரணங்களாகும். இது தொடர்பாக BSNL ஊழியர் சங்கம் தனது வருத்தத்தை DIRECTOR(HR)இடம் பதிவு செய்தது. தற்போது இந்த பிரச்சனைக்கு தீர்வு காண அனைத்து மாநில GM(HR)களுக்கான கூட்டம் ஒன்றிற்கு கார்ப்பரேட் அலுவலகம் அறிவிப்பு கொடுக்க உள்ளதாக தெரிய வருகிறது.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**